# மெட்ரோ ரயிலில் 1.40 லட்சம் பேர் பயணம்

சென்னை, பிப்.15: சென்னை மெட்ரோ ரயில்களில் கடந்த ஞாயிற்றுகிழமை 1.40 லட்சம்பேர் பயணம்செய்தனர்.

வண்ணாரப்பேட்டை -விம்கோ நகர் வரையிலான முதல்கட்ட விரி வாக்க தடத்தில் திட்டப்பணிகள் முடிந்து, மெட்ரோ ரயில் சேவை ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இதையடுத்து, சென்னை மெட்ரோ வின் அனைத்து வழித்தடங்களில் இயக்கப்படும் மெட்ரோ ரயில்களில் ஞாயிற்றுக்கிழமை (பிப்.15) பிற்பகல் 2 மணி முதல் இரவு 11 மணி வரை பய ணிகள் இலவச பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இந்த அறி விப்பை தொடர்ந்து, ஏராளமான மக் கள் மெட்ரோ ரயில்களில் இலவச பய ணத்தை அனுபவித்தனர்.

சென்னை மெட்ரோவின் அனைத்து வழித்தடங்களில் இயக்கப்பட்ட மெட்ரோ ரயில்களில் கடந்த ஞாயிற் றுக்கிழமை மதியம் முதல் இரவு வரை கூட்டம் நிரம்பி வழிந்தது. மெட்ரோ ரயில்களில் மக்கள் உற்சாகமாக சென் னையை சுற்றி வந்தனர்.

சென்னை மெட்ரோ ரயில்களில் ஞாயிற்றுக்கிழமை மட்டும் 1.40 லட்சம் பேர் பயணம் செய்ததாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.